Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 21 (07-12-1991) சனிக்கிழமை ஓசை 292

## கம்பியூட்டர் கோளாறு; மாணவர்கள் அவதி

பரீட்சைத் திணைக்களத்தின் கம்பியூட்டரில் ஏற்பட்ட கோளாறு காரணமாக வடபகுதியின் க.பொ.த.சா.தரப் பரீட்சார்த்திகள் பலர் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர். இப்பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டையில் முகவரி இடும்வேலையில் பல தவறுகள் இடம் பெற்றிருப்பதால் பலபரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை கிடைக்கவில்லை. சிலபரீட்சார்த்திகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஐந்து வரையான அனுமதி அட்டைகள் கிடைத்திருக்கின்றன. இவ்வாறான பல தவறுகளால் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மத்தியில் குழப்பநிலை தோன்றியிருக்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டாவின் சமரச முயற்சி: அரசுக்கு ஒன்றும் தெரியாதாம்

## புலிகளுடனான நிலைப்பாட்டிலும் மாற்றமில்லை அமைச்சர் ரணில் தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் அமைச்சர் தொண்டமான் மேற்கொண்டுவரும் சமரச முயற்சி பற்றி அரசாங்கத்திற்கு எதுவுமே தெரியாது இதுபற்றி அமைச்சர் அவையில் பேசப்படவுமில்லை'' என்று சிறிலங்கா அமைச்சரவையின் பேச்சாளரான திரு. ரணில் விக்கிரமசிங்கா கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடனான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும் அமைச்சர் ரணில் மேலும் தெரிவித்தார்,

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று அமைச்சர் தொண்டமான் கூறியிருப்பது குறித்து அவர்தான் விளக்கமளிக்க வேண்டும். எந்த வொரு அமைச்சரும் புலிகளோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் செல்ல விரும்புவது குறித்து அரசாங்கத்திற்குத் தெரியாது என ரணில் விக்கிரமசிங்கா பத்திரிகையாளர் ஒருவரின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மேலும் அவர் தொண்டமான் கூறியவை குறித்து அவரிடந்தான் கேட்க வேண்டும் என்று கூறியதோடு விடுதலைப் புலிகளோடு அமைச்சர் தொண்டமான் நடத்த விருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக முன் வைக்கப்பட்டுள்ள யோசனைகள் குறித்து அமைச்சரவையில் பேசப்படவில்லை என்று தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக விடுதலைப் புலிகளுடனான அரசாங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான பேச்சின் பெறுபேறு இருப்தி தருகிறது -கிறிஸ்டி சில்வா

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் உணவு விநியோகம் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப் புலிகளோடு நடத்திய பேச்சு வார்த்தையின் பெறுபேறுகள் [illegible]

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்று முந்தினம் கொழும்பில் இதனைத் தெரிவித்த கிறிஸ்டி சில்வா யாழ். குடாநாட்டின் இனிமேல் உணவு [illegible]

## வடபகுதி வங்கிகளை மூடிவிட திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இயங்கும் அரச வங்கிகளை தற்காலிகமாக மூடிவிடுவதற்கு அரச திட்டமிட்டு வருகிறது.

இப்பகுதிகளில் இயங்கும் இந்த வங்கிகளில் கையாளப்படும் திரவப்பணத்திற்கு பாதுகாப்பு உத்தரவாதம் [illegible] சித்து வருகிறது.

வங்கிகளை மூடிவிடுவதன் மூலம் இப்பகுதிகளின் அத்தியாவசிய சேவைகளை மேலும் சீர்குலைக்க முடியும் என்றும் அரச கருதுவதாக அரச வங்கிகளுடன் தொடர்புடைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கி ஆவணங்கள் ஒரு பகுதி மீட்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில்சிறிலங்காப் படையினரின் பிடிக்குள் சிக்கியிருந்த இலங்கைவங்கிக் கிளையின் ஒரு பகுதி ஆவணங்கள் மீட்கப்பட்டிருக்கின்றது.

படையினரது தாக்குதலால் இவ்வங்கி அலுவலகம் பலத்த சேதமடைந்திருக்கின்றது. சேதமடையாமல் எஞ்சியுள்ள தளபாடங்களும் மீதி ஆவணங்களும் மீட்டெடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

## அனுமதி அட்டைப் பிரச்சினை: கல்வித் திணைக்களத்துடன் உடன்தொடர்புகொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிற்கு பரீட்சை அனுமதி அட்டைகள் தொடர்பாக உள்ள பிரச்சினைகளுக்கு உடனடியாக கல்வித் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளும் படி சம்பந்தப்பட்ட மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

விலாசம் சரியாக இருந்தும் பெயர் வித்தியாசமாக இருக்கும் அனுமதி அட்டைகளை உரிய பரீட்சார்த்திகளுக்கு ஒப்படைப்பதற்கு உதவியாக அவற்றை உடனடியாக கல்வித் திணைக்களத்தில் ஒ[illegible]

(4ஆம் பக்கம் பார்க்க)

## வினாத்தாள் நேற்று வரவில்லை

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் இன்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்களின் தியாகங்கள் சுவீடன் பேராசிரியர் ஆய்வு

சுவீடன் நாட்டைச் சேர்ந்த உப்சலா பல்கலைக் கழகப் பேராசிரியர் பீற்றர் சால்க் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் தமிழீழ மண்ணின் சுதந்திரத்திற்காக உயிர்நீத்த மாவீரர்கள் பற்றியும், விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்புக்கள் பற்றியும் ஆய்வு நூல் ஒன்றை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் நூல் சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் பல முக்கியஸ்தர்களுடன் ஆலோ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைக் கண்காணிக்க புதிய புலனாய்வுப் பிரிவு

(சென்னை)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப் பட்டதாக கருதப்படும் குற்றச்செயல்களை புலனாய்வு செய்வதற்காக சிறப்புப் பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பிரதமபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தலைமையில் பல பொலிஸ் அதிகாரிகளும் பொலிசாரும் இப்பிரிவின் கீழ் சேவையில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் சகல குற்றச் செயல்களும் கண்டு பிடிக்கப்படும் வரை இச்சிறப்புப் பிரிவுசெயற்படும் என்று தமிழ் நாட்டு அரசு அறிவித்துள்ளது.

## வலி. வடக்கில் அரச அலுவலகங்களும் படையினரால் சேதம்

வலி. வடக்குப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கும் பகுதிகளில் பொதுமக்களின் குடியிருப்புகள் மட்டுமல்ல அரச

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளும் கருணாநிதியும்

# புலிகளுடனான நிலைப்பாட்டிலும் மாற்றமில்லை அமைச்சர் ரணில் தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் அமைச்சர் தொண்டமான் மேற்கொண்டுவரும் சமரச முயற்சி பற்றி அரசாங்கத்திற்கு எதுவுமே தெரியாது இதுபற்றி அமைச்சர் அவையில் பேசப்படவுமில்லை" என்று சிறிலங்கா அமைச்சரவையின் பேச்சாளரான திரு- ரணில் விக்கிரமசிங்கா கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடனான அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும் அமைச்சர் ரணில் மேலும் தெரிவித்தார்.

அத பிறந்தால் வழி பிறக்கும் என்று அமைச்சர் தொண்டமான் கூறியிருப்பது குறித்து அவர்தான் விளக்கமளிக்க வேண்டும். எந்த வொரு அமைச்சரும் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் செல்ல விரும்புவது குறித்து அரசாங்கத்திற்குத் தெரியாது என ரணில் விக்கிரமசிங்கா பத்திரிகையாளர் ஒருவரின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மேலும் அவர் தொண்டமான் கூறியவை குறித்து அவரிடந்தான் கேட்க வேண்டும் என்று கூறியதோடு விடுதலைப் புலிகளோடு அமைச்சர் தொண்டமான் நடத்த விருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக முன் வைக்கப்பட்டுள்ள யோசனைகள் குறித்து அமைச்சரவையில் பேசப்படவில்லை என்று தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக விடுதலைப் புலிகளுடனான அரசாங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான பேச்சின் பெறுபேறு இருப்தி தருகிறது
### -கிறிஸ்டி சில்வா

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் உணவு விநியோகம் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுதலை புலிகளோடு நடத்திய பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் எமக்குத் திருப்தியளிக்கின்றன என்று புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இதனைத் தெரிவித்த கிறிஸ்டி சில்வா யாழ். குடாநாட்டில் இனிமேல் உணவு விநியோகம் திருப்திகரமாக அமையும் என்றும் தெரிவித்தார்.

## வடபகுதி வங்கிகளை மூடிவிட திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இயங்கும் அரச வங்கிகளை தற்காலிகமாக மூடிவிடுவதற்கு அரசு திட்டமிட்டு வருகிறது.

இப்பகுதிகளில் இயங்கும் இந்த வங்கிகளில் கையாளப்படும் திரவப்பணத்திற்கு பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை என்ற காரணத்திற்கான மேற்படி முடிவை மேற்கொள்வதற்கு அரசு முயற்சித்து வருகிறது.

வங்கிகளை மூடிவிடுவதன் மூலம் இப்பகுதிகளில் அத்தியாவசிய சேவைகளை மேலும் சீர்குலைக்க முடியும் என்றும் அரசு கருதுவதாக அரச வங்கிகளுடன் தொடர்புடைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சமகால விளக்கக் கூட்டம்

சமகால அரசியல் போர்க்கால கருத்தரங்குகள் இன்று வடமராட்சி பிரிவில் இரவு எட்டு மணியளவில் இடைக்காடு மகாவித்தியாலயம், கரணவாய் மகாவித்தியாலயம், தொண்டமானாறு வீரகத்தி வித்தியாலயம், சக்கோட்டை தேவாலயம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

## 8 புதிய பாரா. உறுப்பினரும் நேற்று பதவியேற்பு

(கொழும்பு)

ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்த லலித் அத்துலத்முதலி காமினி திஸநாயக்கா உட்பட எண்மருக்குப் பதிலாக புதிய எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுப் பதவி ஏற்றனர்.

பதவியிழந்த இந்த எண்மரும் அவர்கள் பிரதிநிதித்துவம் வகித்த மாவட்டங்களிலிருந்தே புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்கள். ஐ. தே. கட்சி அபேட்சகர் பட்டியலில் விருப்பு வாக்குகளைப் பெற்றிருப்போரின் வரிசை அடிப்படையிலேயே இத்தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

கொழும்பு மாவட்ட விருப்பு வாக்குகள் பட்டியலின்படி, ஹெச்சன் சமரசிங்க, சிறிநாத் குமரசிங்க ஆகிய இருவரும் புதிய பாராளுமன்ற உறுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கட்சியிலிருந்து மேலும் இருவருக்கு கல்தா

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மேலும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் விலக்கப்படுவர் என கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலநறுவை மாவட்ட ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர் எச். ஜே. முத்துபண்டாவும், கம்பஹா மாவட்ட ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய ரெத்தின ஐயதிலக்கவுமே இவ்வாறு விலக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு உறுப்பினர்களும் இந்த ஆண்டு ஒகஸ்டில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிராக கொண்டு வரப்படவிருந்த அரசியல் குற்றப் பிரேரணையில் கைச்சாத்திட்டதை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டவர்கள் ஆவர்.

## தொண்டர் படைக்கும் நஷ்டஈடு கிடைக்கும்

சிறிலங்கா சிவில் தொண்டர் படைகளுக்கும் ஊர்காவற் படையினருக்கும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்படுவதைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ செயலராக பிரிகேடியர் திலக்பரணகம

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் செயலராக பிரிகேடியர் திலக்பரணகம நியமிக்கப்பட்டுள்ளார். லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா இராணுவத் தளபதியாக பதவி உயர்வு பெற்ற பிறகே திலக் பரணகம இப் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

பிரிகேடியர் லக்கி அலகம இராணுவ நடவடிக்கைப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார். இப்பதவியை முன்னர் பிரிகேடியர் திலக் பரணகம வகித்து வந்தார்.

### வங்கி ஆவணங்கள் ஒரு பகுதி மீட்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் சிறிலங்காப் படையினரின் பிடிக்குள் சிக்கியிருந்த இலங்கை வங்கிக் கிளையின் ஒரு பகுதி ஆவணங்கள் மீட்கப்பட்டிருக்கிறது.

படையினரது தாக்குதலால் இவ்வங்கி அலுவலகம் பலத்த சேதமடைந்திருக்கின்றது. சேதமடையாமல் எஞ்சியுள்ள தளபாடங்களும் மிகுதி ஆவணங்களும் மீட்டெடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

விலாசம் சரியாக இருந்தும் பெயர் வித்தியாசமாக இருக்கும் அனுமதி அட்டைகளை உரிய வரிசை சந்திக்களுக்கு ...

இன்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்களின் தியாகங்கள் சுவீடன் பேராசிரியர் ஆய்வு

சுவீடன் நாட்டைச் சேர்ந்த உப்சலா பல்கலைக் கழகப் பேராசிரியர் பீற்றர் சால்க் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் தமிழீழ மண்ணின் சுதந்திரத்திற்காக உயிர்நீத்த மாவீரர்கள் பற்றியும், விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்புக்கள் பற்றியும் ஆய்வு நூல் ஒன்றை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் நூல் சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் பல முக்கியஸ்தர்களுடன் ஆலோ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைக் கண்காணிக்க புதிய புலனாய்வுப் பிரிவு

(சென்னை)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படும் குற்றச்செயல்களை புலனாய்வு செய்வதற்காக சிறப்புப் பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பிரதமபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தலைமையில் பல பொலிஸ் அதிகாரிகளும் பொலிசாரும் இப்பிரிவின் கீழ் சேவையில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும் சகல குற்றச் செயல்களும் கண்டு பிடிக்கப்படும் வரை இச்சிறப்புப் பிரிவு செயற்படும் என்று தமிழ் நாட்டு அரசு அறிவித்துள்ளது.

## வலி. வடக்கில் அரச அலுவலகங்களும் படையினரால் சேதம்

வலி. வடக்குப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கும் பகுதிகளில் பொதுமக்களின் குடியிருப்புக்கள் மட்டுமல்ல அரச

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளும் கருணாநிதியும் நாகராஜன் வாக்குமூலம்

(சென்னை)

நாளாந்த பொலிஸ் நிர்வாகம், அரசியல் கட்சிகளின் பூசல்களைக் கையாளுதல், தடுத்துவைத்தல், விடுதலை செய்தல், இலங்கைப் போராளிகள் குறிப்பாக விடுதலைப் புலிகள் விவகாரங்கள் ஆகியவை தொடர்பாக பொலிஸ் அதிகாரிகளுக்கு முதல்வர் கருணாநிதியே நேரடியாகப் பணிப்புரை வழங்குவார். புலனாய்வுத் துறையின் டி.ஐ.ஜீ.யின் விசேட அறிக்கைகளைத் தவிர முதல்வரின் பணிப்புரைகள் தொடர்பாக செயலகத்திற்கு தெரிவிக்கப்படுவதில்லை. இவ்வாறு தமிழக அரசின் முன்னாள் உள்துறை செயலாளர் நாகராஜன் திருச்சி மாஜிஸ்ரேட் முன்னிலையில் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

அவரது வாக்குமூலத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதற்காக புலிகள் அமைப்பைச் சேர்ந்த அன்ரன் பாலசிங்கம் அவர் மனைவி, யோகி ஆகியோர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினர். இத்தகைய இரு கூட்டங்கள், துறைமுக நம்பிக்கை விருந்தினர் இல்லத்தில் நடந்தன; முரசொலி மாறன், முன்னாள் கல்வி அமைச்சர் அன்பழகனும் சில தடவைகளில் கலந்து கொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் சேர்ப்பு கட்சி யாப்பிற்கு முரணானது
### - அநுரா

ஒரு கட்சியில் அங்கத்தவராக இருக்கும் ஒருவர் அதே வேளை எமது கட்சியில் அங்கத்தவராகச் சேரமுடியாது என்பது எமது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பு விதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் சந்திரிகா குமாரணதுங்கா உட்பட பதினாறு பேர் வேறொரு கட்சியில் அங்கத்தவராக இருக்கும் போதே சுதந்திரக் கட்சியில் சேர்க்கப்பட்டமை

(4ஆம் பக்கம் பார்க்க)

ஒரு ... நலன்புரிச் சங்க அலுவலகத்தில் கண்டெடுத்து வர்வனால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## வாராந்த கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டு கழகத்தின் ஆதரவில் ஞாயிற்றுக்கிழமைதோறும் இடம் பெற்று வரும் வாராந்தக்கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை 8 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கோண்டாவிலுள்ள கலை, பண்பாட்டுக்கழக தலைமைச் செயலகப் பேரவை கூடத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வார அமர்வில் இயல், இசை வாரிதி சி. வீரமணி ஐயர் அவர்கள் "எனது இயல் இசை உலக அனுபவங்கள்" என்ற பொருளில் கலந்துரையாடுவார் என்றும் அனைவரையும் பங்குபற்றுமாறும் இக் கழகம் வேண்டியுள்ளது.

... யாளர் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை தபாலில் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23X10 ச. மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது திணைக்களங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,
1991-12-04.

(B/3594)



மாவிட்டபுரம் தச்சன்காட்டு மினிமுகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை
### 2-ம் லெப்டினன்ட் மணிமேகன்
### (இராசையா அனுராம்)

இவன் எதிரியின் பாசறையை எரிக்கும் தியாகச்சுடர் இவன் மறைந்தவன் அல்ல மண்ணை மீட்கும் புரட்சிப் பூ!

அனுராம் வீதி, சேந்தாங்குடிச்சி, சண்டிலிப்பாய். (R/1978)

உமது பிரிவால் துயருறும் அப்பா, அம்மா, சகோதரர்கள் உற்றார், உறவினர், நண்பர்கள்.

G A Q.

1st in Com துறைக்கான இணைப்பாடம் (sub) ENGLISH

வகுப்புக்கள்
(வியாழன், வெள்ளி)
ஆரம்பம்:
12-12-1991
(மாலை 4-00 மணி)
BY : BRITTO
திருமதி S அருள்நங்கை
- நிர்வாகி -
(B/3574)

1992 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வரியினை முழுமையாகச் செலுத்தினால் 10 வீத வரிக் கழிவு வழங்கப்படும். சுற்றாயங்களுக்கான வரியை அந்த தவணைகளின் முதல் மாதத்துக்குள் செலுத்தினால் 5 வீத வரிக்கழிவு வழங்கப்படும்.

வரி செலுத்துப்பவர்கள் ஆதனங்களில் எவ்வித நிலுவைகளும் இல்லாத பட்சத்திலேயே வரிக்கழிவுகள் அனுமதிக்கப்படும். நிலுவைகள் இருப்பின் அவ்வாறான நிலுவைகளையும் முழுமையாக செலுத்தும் பட்சத்திலேயே வரிக்கழிவுச் சலுகைகள் வழங்கப்படுமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
4-12-91

(B/3592)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்
05-10-1966

வீர மரணம்
07-12-1988

07-12-88 அன்று மாதனையில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் பதுங்கி இருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரமரணமடைந்த

### லெப்டினன்ட் அசோக்
### (சிவ. சிறீதரன்)

மாவீரனே மைந்தனே அசோக்
விடியலை நெருங்கி மறந்தீரே - எம்மை இருளில்
விட்டு மறைந்தீரே - எம நெஞ்சில் எரிந்த
தீயே - மீண்டும் எம் மடியில் வந்து தோன்றுவாயே
மானம் காக்க பிறந்தீரே - மக்கள் வாழ உயிரை
துறந்தீரே - விடியும் வேளை வந்து விடும் - உனது
வீரம் நாளை வென்று விடும் - மீண்டும் இங்கே
தோன்றுவாயே - தமிழீழம் மீட்க விரைந்தோடி
வருவாயோ ... ...

தாய விடிவிற்காக நாம் போராடும் போது, இடையில் குறுக்கிடும் சில விஷமிகளை அழிப்பதென்பது தவிர்க்க முடியாத தொன்றாகும்.

-அசோக்

'அசோக் வீதி'
புலோலி மேற்கு
பருத்தித்துறை

(R/1961)

-குடும்பத்தினர்

உங்கள் குழந்தைகளை
எங்களிடம் ஒப்படையுங்கள்



## 92 ஆம் ஆண்டிற்கான புதியபிரிவு

## ஆண்டு 5

(புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய வகுப்பு)

- யாழ் நகரில் அதிக எண்ணிக்கையான மாணவர்களை புலமைப் பரிசிற்குரியவர்களாக்கிய ஆசிரியர் குழு.
- வாரந்தோறும் மாதிரிப் பரீட்சை
- ஒவ்வொரு பிரிவிலும் குறைந்த எண்ணிக்கையிலான குறிப்பிட்ட மாணவர்கள்
- 10 - 12 - 91 பிற்பகல் 5-00 மணிக்கு முன்னதாக எமது நிறுவனத்தின் ஆரம்ப பிரிவில் (UNIVERSAL PRIMARY) பெயர்களை பதிவு செய்யவும்.

அனுமதிப் பரீட்சை: 14 - 12 - 91 (பி. ப. 3-00 மணி)

## யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(B/3597)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 12 - 07

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறை மாதனைப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

லெப். அசோக் (சிவகுரு சிறிதரன் - அசோக் வீதி, கட்டுவளை, புலோலி மேற்கு, பருத்தித்துறை)

தேர்வீசடியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

சுருளி (முருகன் சிவராசா கரவெட்டி கிழக்கு)

1990 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் சிறிலங்காப் படையினர் பதுங்கிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

நாயர் / நரயன் (செல்லத்துரை - துரைராசா காங்கேயன்குளம், திரியாய்)

கட்டுவனில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

கப்டன் கடாபி (தங்கவேல் பாபு முள்ளி ஒழுங்கை அரியாலை)

மன்னார், நானாட்டான் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த மாணவன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3589)

# புகலிடம் வழங்குவதைக் கட்டுப்படுத்த ஜேர்மன் சமஷ்டி அரசு யோசனை

(பேர்லின்)

அகதிகள் தொகையைக் கட்டுப்படுத்தவும், வன்செயல்களை ஒழிக்கவும் உதவுமுகமாக புகலிடம் கோரும் சட்டத்தைக் கடினப்படுத்துவதென ஹெல்மட் கோலின் சமஷ்டி அரசு யோசனை செய்து வருகிறது.

பிறநாட்டவர்களுக்கு எதிராக வன்செயல்களில் ஈடுபட்டு வரும் நவநாஸிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும்

அகதிகளின் வருகையைக் கட்டுப்படுத்தவுமே இந்தச் சட்டத்தை அமுல்படுத்த விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது.

1991 இல் மட்டும் ஜேர்மனியில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான அகதிகள் புகலிடம் கோரியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அகதிகளின் வருகையை சமாளிக்கும் வகையில் முகாம்களை அமைத்து உண்மை நிலையை அறிந்து தகுதியற்றவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது.

இதன் படி பதினாறு ஜேர்மன் ராஜ்யங்களிலும் முகாம்கள் அமைக்கப்படும். அகதிகளின் அரசியல் புகலிட கோரிக்கை ஆராயப்பட்டு உண்மை நிலையில் உள்ளோர்களுக்கு புகலிடம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போலவே நீண்ட காலம் அரசியல் புகலிடம் அளித்து வந்த கனடாவும் தனது போக்கில் கடுமை காட்டி வருகிறது.

1990 இல் 70 சத விகிதமாக இருந்த அகதிகளின் விகிதாசாரம் இந்த ஆண்டு 51 சத விகிதமாகக் குறைந்துள்ளது.

ஆனால் வர்த்தகக் குடியேற்றக்காரர்களைக் குடியேற்ற கனடா விரும்புகின்றது.

## சுன்னாகம் வர்த்தக நிலையங்கள்

# சனி மாலை வரை திறக்க கோரிக்கை

(சுன்னாகம்)

சுன்னாகம் பகுதி பாவனையாளர்களது நன்மை கருதி சுன்னாகப் பகுதியில் உடுவில் உதவி அரசாங்க அதிபரால் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரம் பெற்ற வர்த்தக நிலையங்கள் மட்டும் இன்று சனிக்கிழமையும் அடுத்து வரும் சனிக்கிழமையும் மாலை ஆறு மணிவரை திறந்திருக்கும் என வர்த்தகர் ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

மேற்படி அனுமதியை பெற்ற வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் சனிக்கிழமைகளில் மாலை ஆறுமணிவரை திறந்திருக்குமாறு சுன்னாகம் வர்த்தகர் சங்கமும் சுன்னாகம் வர்த்தகர் ஊழியர் சங்கமும் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளன. (ச)

---

மாவீரர்களின்

சன கலப்பர் என்றும் சொல்லப்படுகிறது.

ஜேர்மனியர் பீற்றர் சால்க் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் எதிர்வரும் 10 ஆம் திகதியளவில் சந்திக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. பேராசிரியர் பீற்றர் சால்க் ஏற்கனவே பல தடவைகள் யாழ்ப்பாணம் வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

அரச

அலுவலகங்களும் படையினரால் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு அப் பகுதிகளுக்குச் சென்று திரும்பிய அரச அதிகாரி ஒருவர் அதிர்ச்சியுடன் தெரிவித்தார். இப் பகுதிகளில் உள்ள வீதிகளின் இரு மருங்கிலும் அமைக்கப்பட்ட அனைத்து வீடுகளும் சேதமாக்கப்பட்டிருப்பதுடன் உடைத்தெடுக்கப்பட்ட கட்டிடப் பகுதிகளைக்கொண்டு படையினர் பாதுகாப்பு அரண்களை அமைத்துள்ளனர். வீடுகளில் காணப்பட்ட அனைத்துப் பொருட்களும் சூறையாடப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

---

கம்பியூட்டர்

றது. இக்குழப்ப நிலையைப் போக்குவதற்கு யாழ். கல்வித் திணைக்களம் தீவிர முயற்சி எடுத்து வருகின்ற போதிலும் பல பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலையை தவிர்க்க முடியாத நிலை தோன்றியுள்ளது. (அ)

---

# மூளைக் காய்ச்சலினால் மரணம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் மூளைக் காய்ச்சல் நோய் காரணமாக இந்த ஆண்டு இதுவரை ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி நோயினால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளை விட இவ்வாண்டு அதிகமாக உள்ளது. 1988 ஆம் ஆண்டு மூன்று பேரும் 89 ஆம் ஆண்டு இருவரும் 90 ஆம் ஆண்டு நான்கு பேரும் இவ்வாண்டு நேற்றுவரை ஐந்து பேரும் மேற்படி நோயால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளனர். யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருபத்திநான்கு மணித்தியாலத்திற்குள் நேற்று ஒரு பெண் இந்த நோயால் மரணமடைந்திருக்கிறார். (அ)

---

தொண்டாவின்

கத்தின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும்.

வடபகுதிக்கு அமைச்சர்கள் செல்லலாம், ஆனால் அவர்கள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தமாட்டார்கள், அதற்காக செல்லவும் மாட்டார்கள் என்றும் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

---

புதிய

பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஏனைய புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் விபரம் வருமாறு:

எம். சிவலிங்கம் (நுவரெலியா), ஆர். எம். ஆர். கி. பண்டாரா (குருநாகல்), டபிள்யூ. டி. சில்வா (இரத்தினபுரி), ஆர். எம். அப்புஹாமி, டி. வி. சென்னன்

---

கல்வித்

படைத்து தங்களுக்குரிய சரியான அனுமதி அட்டைகளைப் பெற்றுச் செல்லுமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். பல அனுமதி அட்டைகள் உரியவர்கள் எடுத்துச் செல்லாமல் இருப்பதால் சனி, ஞாயிறு தினங்களிலும் பகல் 12.00 மணிவரை கல்வித் திணைக்களத்திற்குச் சென்று அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

---

வடபகுதி

---

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை மூன்று மணி முதல் நீக்கப்பட்டிருப்பதாக கூட்டுப்படைத் தலைமையலுவலகம் நேற்று கொழும்பில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

---

புலிகளும்

வது உண்டு. கருணாநிதியின் ஆலோசகர் எம். குகதாசனைத் தவிர எமது தரப்பிலிருந்து அதிகாரிகள் எவரும் பங்குபற்றவில்லை. நானும் பொதுச் செயலாளர் சங்கர சுப்பையனும், புலனாய்வுத் துறை டி. ஐ. ஜி. ஆகியோர் கூட்டம் நடக்கும் அறைக்கு வெளியில் இருந்தோம். குறிப்பிட்ட சில விபரங்களைத் தவிர கூட்டத்தில் நடைபெற்றவிடயங்கள் குறித்து எமக்குத் தெரியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாக்குமூலத்திலேயே மேலும் டீசல், எண்ணெய், மருந்துகள், ஆயுதங்கள் ஆகியவை கரையோரப்பகுதிகள் ஊடாக புலிகளால் எடுத்துச் செல்லப்படுவதாக உத்தியோகபூர்வமற்ற அறிக்கைகள் தெரிவித்தன. மற்றும் சென்னை எக்மோரில் மோட்டார் சைக்கிள் விபத்தில் கைதான புலிப் போராளி ஒருவரிடமிருந்து இரண்டு லட்சம் ரூபாவும் கைப்பற்றப்பட்டதுடன், அவரும் கைதானார். பின்னர் அப் போராளி அமைச்சர் திருமதி சுப்புலட்சுமியின் வேண்டுதலின் பேரில் விடுவிக்கப்பட்டதாக முன்னாள் நகரப் பொலிஸ் ஆணையாளர் பி. துரை எனக்கு அறிவித்தார்.

அத்துடன் நான் ஒரு போதுமே புலிகளுக்கோ, அல்லது வேறு இலங்கைப் போராளிகளுக்கோ உதவி வழங்கியதில்லை எனவும், எனது கையெழுத்தின் கீழே என்பது புலிப் போராளிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர் எனவும், புலிகளுக்குத் தங்குமிட வசதியோ, வேறெந்த உதவிகளையோ, நான் ஒரு போதும் வழங்கியதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

---

வினாத்தாள்

எதிர்பார்த்தபடி நேற்று வினாத்தாள்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவில்லை. விமானமூலம் பலாலி வரை எடுத்து வரப்பட்டு கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டதா என்பதை நேற்று நள்ளிரவு வரை உறுதி செய்ய முடிய

---


## வெற்றிடங்கள்

சிறைக்காவலர்

தமிழீழ காவல் துறையில் சிறைக்காவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் இருபாலாரிடமும் இருந்து கோரப்படுகின்றன.

**தகைமைகள்;**

※ ஆகக் குறைந்தது எட்டாம் வகுப்பு கல்வித் தகைமை.

※ உயரம் 5' 6'' ஆக இருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்களுடன் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு நாவலர்வீதியிலுள்ள தமிழீழ காவல் துறையின் தலைமைச் செயலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

பொறுப்பாளர்
(B/3600 தமிழீழக் காவல்துறை


## மரண அறிவித்தல்

திருமதி
தெய்வகுலரட்ணம் வசந்தா நீலோஜனி

திருமதி தெய்வகுலரட்ணம் வசந்தா நீலோஜனி காலமானார். இவர் க.தெய்வகுலரட்ணம் (கோட்டக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்) அவர்களின் மனைவியும், திரு, திருமதி ஆ. பிள்ளைநாயகம் தம்பதிகளின் மகளும், திரு, திருமதி ச. நடராஜசிங்கம் தம்பதிகளின் மருமகளுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (07-12 1991) பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்
மானிப்பாய் வடகிழக்கு, க.தெய்வகுலரட்ணம்
மானிப்பாய்.

(B/3601)

## 90 வது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



தாயின் மடியில் 24-1-1971

தாயக மீட்பில் 09-09-1991

2 ஆம் லெப்டினன்ட் நேசன்

